<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இறந்துபோன பாபு எனக்கு நெருங்கிய நண்பா ் என்றால ் சரிதான். எனக்கும், இறந்துபோன பாபுவிற்கும் 2008ம் ஆண்டில் ஒப்பந்தம் ஏற்பட்டது. எனக்கும், அவருக்கும் நிலகோட்டை, வாடிப்பட்டி ஆகிய ஊர்களில் 24 ஏக்கர் நிலம் வாங்கி தருவதாக ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எழுத்து பூர்வமாக ஒப்பந்தம் எழுதிக் கொள்ளவில்லை, எனக்கும், அவருக்கும் வாய்மொழியாக ஒப்பந்தம ் இருந்தது. அவ்வாறு 24 ஏக்கா ் நிலத்தை வாங்கி தருவதற்காக இறந்துபோன பாபுவிற்கு ரூபாய் 65 லட்சம் கொடுத்தேன். அவ்வாறு ரூபாய் 65 லட்சம் இறந்துபோன பாபுவிற்கு கொடுத்ததை காட்ட ஆவணம் எதுவும் எழுதி வாங்கவில்லை. என ் முன ் காட்டப்படும ் ஒளி நகல ் ஆவணம ் பாபு எனக்கு எழுதிக ் கொடுத்தது என்றால் இல்லை. என் முன் காட்டப்படும் ஒளி நகல் ஆவணத்தில் ரூபாய் 25 லட்சம் நான் பாபுவிற்கு கொடுத்ததாக 10.04.2011-ல் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 8 ஏக்கர் எனக்கு எழுதிக் கொடுப்பதாக வாசகங்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் அசல் என்னிடம் உள்ளது என்றால் இல்லை. என்முன் காட்டப்படும் ஒளி நகல் கடனுறுதி சீட்டு பாபு எனக்கு எழுதிக் கொடுத்தது என்றால் சரிதான். அந்த கடனுறுதி சீட்டை பாபு எனக்கு ரூபாய் 25 லட்சத்திற்கு 16.02.2009 அன்று எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி கடனுறுதி சீட்டை பாபு வாங்கிய பணத்திற்கு எழுதிக் கொடுத்ததாகும். நான் எனது சொந்த வங்கி கணக்கில் இருந்து பாபுவிற்கு பணம் கொடுத்தேன் என்றால் நிறுவன கணக்கிலிருந்து ரூபாய் 19 லட்சம் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, தாம்பரம் கிளை காசோலை மூலம் கொடுத்தேன். ் மேற்படி தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி, தாம்பரம ் கிளையில் உள்ள வங்கி கணக்கு எவர்ஜைன் டிம்பர் என்ற நிறுவனத்தின் பெயரில் உள்ளது. அவருக்கு எந்த தேதியில் மேற்படி வங்கி கணக்கு மூலம ் பணம ் கொடுத்தேன ் என்றால ் 2008-2009ம ் ஆண்டில் கொடுத்திருப்பேன். என்னிடம் வங்கி கணக்கு பட்டியல் உள்ளது. எனது தனிப்பட்ட வங்கி கணக்கிலிருந்து எவ்வளவு பணம் கொடுத்தேன் என்றால் அவ்வாறு கொடுக்கவில்லை. மேற்படி ரூபாய் 19 லட்சத்தை தவிர பாபுவிற்கு வேறு பணம் கொடுக்கவில்லை என்றால் ரொக்கமாகவும்

கொடுத்தேன். அவ்வாறு கொடுத்த தொகைக்கு நான் ஆவணம் எழுதி வாங்கவில்லை. மேற்படி தொகையை என் நிறுவனத்தில் இருந்த வியாபார தொகையில் கொடுத்தேன். நான் அவ்வாறு ரொக்கமாக ரூபாய் 40 லட்சம் கொடுத்தேன். நான் பணம் கொடுத்ததாக குறிப்பிடும் நிறுவனம் தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம் என்றால் சரிதான். அதற்கு லாப நட்ட கணக்கு உள்ளது. அந்த நிறுவனத்தின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள். மேற்படி தணிக்கை செய்யப்பட்ட கணக்கில் பாபுவிற்கு கொடுத்த ரூபாய் 60 லட்சத்தை காட்டியுள்ளேனா என்றால் இல்லை. நிலக்கோட்டை மற்றும் வாடிபட்டியில் உள்ள நிலங்களை வாங்கி தருவதாக பாபு யாருடன் வியாபாரம் செய்தார் என்றால் அந்த விவரங்கள் தெரியாது. பாபுவுடன் சேர்ந்து தேவேந்திரன், விஜயராகவன், சந்திரசேகரன் ஆகியோரும் சேர்ந்து தொழில் செய்தார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் அவர்கள் சேர்ந்து செய்ததாக கேள்விபட்டேன். எனக்கு நேரடியாக தெரியாது. என் பெயரில் நிலக்கோட்டையில் எவ்வளவு நிலத்தை பாபு எழுதிக் கொடுத்தார் என்றால் என் பெயரில் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை. என் முன் காட்டப்படும் ஒளி நகல் கிரய பத்திரமானது என் பெயரிலும், பாபு பெயரிலும் உள்ளது. அதில் 3 ஏக்கர் 55 சென்ட் நிலம் காட்டப்பட்டுள்ளது. மேற்படி பத்திரத்தை தேவேந்திரன் பொது அதிகார முகவராக காட்டி எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி கிரய பத்திரத்தில் கண்ட 3 ஏக்கர் 55 சென்ட் நிலத்திற்கும், நான் பாபுவிற்கு நிலம் வாங்க கொடுத்த பணத்திற்கும் எந்த தொடர்புமில்லை. அது நானும், பாபுவும் செய்த தனிப்பட்ட நடவடிக்கையாகும். மேற்படி கிரய பத்திரப்படி பாபுவிற்கு இருந்த அரை பங்கிற்காக ரூ.9,50,000/-யை நான் அவருக்கு கொடுத்து விட்டேன். மேற்படி பத்திரத்தின் அடிப்படையில் நான் பாபுவிடமிருந்து விடுதலை எழுதி வாங்கிவிட்டேன். எனது வழக்குரையில் நிறுவன கணக்கிலிருந்து முறையே ரூபாய் 50 லட்சம், ரூபாய் 40 லட்சம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)